**செய்தி வெளியீடு எண்: 775** **நாள்:20.10.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களை, மாண்புமிகு தெலுங்கானா மாநில முதலமைச்சர் திரு. சந்திரசேகர ராவ் அவர்கள் இன்று (20.10.2020) தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு, மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தெலுங்கானா மாநிலத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 கோடி ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயார் திருமதி தவுசாயம்மாள் அவர்களின் மறைவிற்கு மாண்புமிகு தெலுங்கானா மாநில முதலமைச்சர் அவர்கள் தனது இரங்கலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**